செ.வெ.எண்-22 நாள்-15.02.2017

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் அமைப்பதற்கு 18 எண்கள் **ரூ.36.50 லட்சம்** அரசு மான்யமாக அரசு ஆணை எண்.332 அக்ரி (AE1) நாள்.17.11.2016-ன் படி இலக்கு நிர்ணயம் செய்து வரபெற்றது. இதில் 5 **HP** சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் குழாய் கிணற்றில் அமைக்க 5 எண்கள் **ரூ.10.80 லட்சம்** அரசு மாண்யம் பொது பிரிவுனருக்கும், 5 **HP** சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் குழாய் கிணற்றில் அமைக்க 1 **எண் ரூ.2.38 லட்சம்** அரசு மான்யம் ஆதிதிரவிடர் மற்றும் பெண் விவசாயிகளுக்கும், 7.5 **HP** சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் குழாய் கிணற்றில் அமைக்க 7 எண்கள் **ரூ.13.608 லட்சம்** பொது பிரிவுனருக்கும், 10 **HP** சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் குழாய் கிணற்றில் அமைக்க 5 எண்கள் **ரூ.9.72 லட்சம்** பொது பிரிவுனருக்கும் ஆக மொத்தம் 18 எண்கள் **ரூ.36.50 லட்சம்** அரசு மான்யமாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே சூரிய சக்தியுடன் கூடிய நீரேற்றி மோட்டார் அமைக்க விருப்பம் உள்ள அரியலூர் மற்றும் திருமனூர் ஒன்றிய பகுதி விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் (வே.பொ), அரியலூர் அலுவலகத்தையும், ஆண்டிமடம், செந்துறை, தா.பழூர் மற்றும் ஜெயங்கொண்டம் ஒன்றிய பகுதி விவசாயிகள் உதவி செயற் பொறியாளர் (வே.பொ), ஜெயங்கொண்டம் அலுவலகத்தையும் தொடர்பு கொண்டு விண்ணப்பங்கள் அளிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேற்படி சூரிய சக்தி மூலம் நீரேற்றி மோட்டார் அமைக்க பெறப்படும் விண்ணப்பங்கள் அமைக்கும் மூதுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும். அவ்வாறு பரிசீலிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், மோட்டார் குதிரைத்திறனுக்கு ஏற்ப விவசாயின் பங்கு தொகையாக 5 **HP** சூரிய சக்தி நீரேற்றி மோட்டாருக்கு **ரூ.104500/-ம்**, 7.5 **HP** சூரிய சக்தி நீரேற்றி மோட்டாருக்கு **ரூ.131205/-ம்** மற்றும் 10 **HP** சூரிய சக்தி நீரேற்றி மோட்டாருக்கு **ரூ.164807/-** வங்கி வரைவோலையை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் பெயரில் எடுத்து சமந்தப்பட்ட வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தில் சமர்ப்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறது என அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.